# விவேக போதினி.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 1 } 1909-௵ ஏப்ரல் ௴ { பகுதி 10


## வேதங்கள் அனாதி

THE VEDAS, ETERNAL

---

மேனாட்டவர்களால் எழுதப்பட்ட நமது தேசத்துச் சரித்திரங்களில், நமது வேதங்கள் ஆரியரிஷிகளால் சற்றேறக்குறைய 5000 வருஷங்களுக்கு முன்பாக உண்டாக்கப்பட்டனவென்றும், இவைகள் ஸிந்து, கங்கை ஆகிய இந்நதிகளுக்கு இடையில் உள்ள மத்தியப் பிரதேசங்களிலேயே உண்டானவைகள் என்றும், காணப்படுகின்றன. இதனால் வேதங்கள் 5000, வருஷங்களுக்குமுன்பு இல்லை என்றும், மனிதர்கள் இவைகளைப் புதிதாய் உண்டாக்கினார்கள் என்றும் உங்கள் மனதில் ஒரு விபரீத எண்ணம் உண்டாகலாம். நமது சாஸ்திர ஒழுங்காய்க் கற்றறிந்த பெரியோர்கள் இச்சரித்திரமெழுதும் குணம் வாய்ந்த நூலாசிரியரது கொள்கைள் யாவும் உண்மை என அங்கீகரிப்பது அரிது. நுனிப்புல் மேயும் தூர்வழக்கத்தை விட்டு நமது வேதங்களில் அடங்கியிருக்கும் விஷயங்களின் நோக்கம் அவைகளின் உட்பொருள் இவைகளை ஆராயும் திறனுடைய மனதை உடையவர்களுக்கு, நமது சாஸ்திரஞ்ஞாள் வேதங்களின் அநாதித்வத்தையும், அபௌருஷேயத்வத்தையும்பற்றி எடுத்துக்காட்டும் கொள்கைகள் தகுந்த ஆதாரங்களோடு கூடியவைகள் என்பதும், ஆகையால் அவைகளைத் தள்ளிவிடக்கூடாதென்பதும், நன்றாய் விளங்கும். ஆகவே இக்குணமுடையவர்களுக்கு, புதிய சரித்திரமெழுதுவோர் கொள்கைகளில் எவ்வளவு உண்மை அடங்கி இருக்கிறதோ அதைவிட அதிக உண்மை நமது வேதசாஸ்திரிகளது கொள்கையில் உண்டு என்பதும் யனதில் நன்றாய்ப்படும். ஏனெனில் புதிய சரித்திரம் எழுதுவோர் தமக்குத்தோற்றமாத்திரத்தில்எவ்வளவுஅறியக்கூடுமோ அதைவைத்துக்கொண்டு இவ்விஷயங்களை ஆராய்ந்திருக்கின்றனர்; நமது ரிஷிகளோ அவ்வாறில்லாது வேதவாக்கியங்களது உட்பொருளை நன்குஉணர்ந்து ஆழ்ந்து ஆராய்ந்து தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றனர். இவ்விரண்டுவித ஆராய்ச்சிகளும் ஒன்றற்கொன்று முரணன்று என்பதை ஸ்தாபிக்க இடமுண்டு.

வேதங்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டனவென்பது இக்காலத்தில் நூதனமாக உண்டான ஆக்ஷேபமல்ல, முன் காலத்திலும் வேதத்திற்குப் புறப்பட்ட வாதிகள் சிலர் வேதத்தின் அநாதித்வத்தைப்பற்றி ஐயுற்றிருக்கின்

றனர். அவர்கள் வெளியிட்டிருக்கும் எதிர்வாதத்தில் இக்காலத்தவரது சந்தேக விபரீதங்கள் யாவும் அடங்கியுள்ளன, இனிமேலும் அவர்கள் சந்தேகித்து எதிர்வாதம் பண்ணியதில் அடங்காத எதிர்வாதம் எவர்களாலும் பண்ணமுடியாது. இப்படி அதி விஸ்தாரமாய்க் கிடக்கும் வாதங்களை இங்கே பூர்ணமாக எடுத்துக் காட்டுவது அஸாத்தியம். ஆகையால் இங்கு சில முக்கியமான ஆக்ஷேபனைகளையும் அவைகளுக்கு நமது ரிஷிகள் எடுத்துக் காட்டிய ஸமாதானங்களையும் சுருக்கிச் சொல்லுவோம். மற்றைய விஷயங்களை நீங்கள் வேதபாஷ்யங்களை நேரே படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

வேதங்களை அனாதி என நம்பாத வேதபாஹ்யரான வாதிகள் பின்வருமாறு சங்கிக்கின்றனர். "வேதங்கள் எதனால் ஆக்கப்பட்டன? காளிதாஸன், வால்மீகி, வியாஸர் இவர்களால் செய்யப்பட்ட நூல்களைப்போல் வேதங்களும் பதங்களால் ஆக்கப்பட்டவைகளல்லவோ? எவ்வளவு காலங்களுக்கு முன்னுண்டான நூல்களாய் இருந்தபோதிலும் அவைகளை எழுதிய மனிதர்கள் சிலர் இருக்கவேண்டுமல்லவா? இப்படி இருக்க வேதங்களும் ஒன்று அல்லது பல மனிதர்களால் எழுதப்பட்டுள்ளன என்பது யுக்திக்குப் பொருந்தாது என்று நாம் ஏன் எண்ணவேண்டும்? மேலும் வேதங்களில் சிலபாகங்களில் உள்ள விஷயங்களை உற்று நோக்கில் இவைகள் மனிதராலேயே உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது எளிதில் விளங்கும். வேதங்களில் சில பாகங்களுக்கு காடகம், கௌதூமம், தைத்திரீயம் முதலிய பெயர்கள் அமைந்திருக்கின்றன. இப்பெயர்களால் இப்பாகங்கள் காடக, குதம, தித்திரிமுதலியவர்களால் உண்டாக்கப்பட்டன என்பது ஒருவாறு விளங்கும். மேலும் வேதங்களில் சில மந்திரங்கள் விசுவாமித்திரராலும், சில வஸிஷ்டராலும், சில வாமதேவராலும்கண்டுபிடிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மந்திரங்களும் அவைகளைக் கண்டுபிடித்த ரிஷிகளது பெயர்களும், நூல்களும் அவைகளைச் செய்த ஆசிரியரது பெயர்களும்போன்ற ஸம்பந்தமுடையவைகள்தானே? இப்படி இருப்பதால் வேதங்கள் அனாதி என்பதை எப்படி அங்கீகரிக்கக்கூடும்?' இது வேதத்தின் அனாதித்வத்திற்கு முக்கிய ஆக்ஷேபணம்.

முன்சொன்ன வேதவிரோதிகளான வாதிகளது ஆக்ஷேபங்கள் எல்லாவற்றிற்கும், வேதம் என்றபதத்திற்குச் சாஸ்திரப்படி உண்மையான பொருளை அறியாதிருத்தலே காரணம். வேதம் என்ற பதத்திற்கு ஞானம் அல்லது அறிவு என்று பொருள் என்று முன்னமேயே எடுத்துக்காட்டி இருக்கிறோம். பின்பு இந்தப் பதத்திற்கு ஆத்மஞானம் என்றபொருள் உண்டாயிற்று. இதுதான் வேதம், என்ற நமது மத நூலின் பெயரது பொருள். இதனால் இப்பதஅர்த்தம் இப்பொழுது நமது காலம் வரையில் வந்திருக்கும் மத சாஸ்திரங்களையும், முன்னோருக்குத் தெரிந்தவையாயும் நடுவில் நஷ்டமாய்ப் போனவைகளாயும் உள்ள சிறந்த மதவிஷயங்களையும், இனிமேல் ஸகலராலும் மத விஷயங்களில் புதிதாய் வெளிவரப் போகிற உண்மைகளையும் அடக்கியுள்ளது. நமக்கு வந்திருக்கும் வேதரகஸியங்களில் சிலவற்றுள் அடங்கியிருக்கும் விஷயங்கள் வேறு எவ்விதப் பிரமாணங்களாலும், எவ்விதப் புத்தகங்கள் மூலமாயும் அறியப்படாதனவாய் இருந்தபோதிலும் நமது முன்னோர்கள் தங்களுக்கு அக்காலத்தில் தெரிந்தவைகளே ஞானங்களின் முடிவு, வேறு புதிதாய் ஒருவராலும் உண்மைகளை உணரமுடியாது என்ற வீண் கர்வம் நிறைந்த மனச்சிறுமை உடையவர்களல்லர். வேதங்களே, வேதங்கள் அனந்தம் என்று ஒப்புக்கொள்ளுகின்றன. இப்படி அனந்தமாய் விரிந்துகிடக்கும் வேதங்களில் சிறுபாகங்களே நமக்குக்கிடைத்திருக்கின்றன. ஒவ்வொரு வேதத்திலும் அநேக சாகைகள் இருந்

தனவென்றும் அவைகளில் பல நஷ்டமாய்ப் போய்விட்டனவென்றும், ஸாமவேதத்தில் 1000 சாகைகள் இருந்தன என்றும் அவைகளில் இரண்டு மூன்று சாகைகளே இப்பொழுது இருக்கின்றன என்றும் வேதவித்துக்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கொள்கைக்கு இப்பொழுது வேதங்களில் காணப்படும் சில மந்திரங்களே (உடைந்தமந்திரங்களே) ஸாக்ஷியாம். இம்மந்திரங்களைக் கண்டுபிடித்தவர் இன்னார் இன்னார் என்றும், இவை இன்ன இன்ன சாகைகளைச் சேர்ந்தனவென்றும் அறியமுடியாததால் இவைகளுக்கு இப்பெயர் உண்டாயிற்று. எப்படி முன் இருந்த சாகைகள், இருந்தவிடம் தெரியாமல் நஷ்டமாயினவோ, அதுபோல புதிதாய் மஹான்களால் அறியப்பட்டு வேதசாகைகள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதே நமது வேதங்களது கொள்கை, ஏனெனில் வேதரகஸியங்கள் அனந்தம். இதற்கு யாஞ்ஞவல்க்யர் தமது குருவாகிய வைசம்பாயனரிடம் அபிப்பிராய பேதப்பட்டு சுக்கிலயஜுர்ச்சாகையை ஸூரியனது அனுக்கிரகத்தால் கண்டுபிடித்தது ஒரு ஸாக்ஷியாகும்.

இப்பொழுது சரித்திர மெழுதுவோர்கள் மந்திரங்களின் ரகஸியத்தைக் கண்டுபிடித்தவர்களே அவைகளைப் புதிதாய் உண்டாக்கியவர்கள் என்று அறியாமையால் எண்ணுகிறார்கள். நமது ரிஷிகள்முன்னமே இருந்ததாயும் நடுவில் நஷ்டமானதாயும் உள்ள மந்திர ரகஸியங்களை அனுபவித்தறிந்து கண்டவர்களே ஒழிய அவைகளைப் புதிதாய் உண்டாக்கியவர்களல்லர். இந்தவிஷயத்தை நன்குவிளக்குவதற்காகப் புதிய பிரகிருதிசாஸ்திரவிஷயங்களில் இருந்து ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் காட்டுவோம். பிரகிருதி சாஸ்திரங்களில் கிருஹங்களுள் ஒருவிதமான ஆகர்ஷணசக்தி இருக்கிறது என்ற உண்மையை ஸர் ஐஸக் நியூடன் கண்டுபிடித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலே நியூடனே இந்த ஆகர்ஷண சக்தியைப் புதிதாய் உண்டாக்கினவன் என்று எண்ணிவிடக்கூடாது. தொன்றுதொட்டு இருப்பனவாயும் இன்னும் எக்காலத்திலும் இருக்கப்போகின்றனவாயுமுள்ள ஒழுங்குகளின் வைசித்திரியத்தை நியூடன் தனது புத்தி நுட்பத்தால் பார்த்து கிரஹித்து யாவரும் எளிதில் அறிய வெளியிட்டிருக்கிறான். நியூடனாவது இன்னும் வேறு யாராவது இந்த ஒழுங்குகளைக் கண்டுபிடித்தாலும் அல்லது கண்டுபிடிக்காவிட்டாலும் இவ்வொழுங்குகள் எக்காலத்திலும் மாறாது இருந்து தொழிற்பட்டேவருமென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. இதுபோலவே வேதரகஸ்ய விஷயங்களை நமது ரிஷிகள் கண்டுதெளிந்தவர்களே ஒழிய இவைகளைப் புதிதாய் சிருஷ்டித்தவர்களல்லர். வேதவித்துக்களே இம் மஹரிஷிகளை மந்திரதிரஷ்டர்கள் அல்லது மந்திரங்களின் உண்மைகளைக் கண்டவர்கள் என்று வர்ணிக்கின்றார்கள்.

இந்த மந்திர திரஷ்டர்கள் எந்த ரூபமாக மந்திரங்களின் உண்மைகளைக் கண்டு தெளிந்தனரோ அந்த ரூபமாகவே வேதங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன. இவ்விஷயத்தில் இந்த ரிஷிகள் வேதமந்திரங்களை இப்பொழுதிருக்கும் ரூபமாகவே கண்டுபிடித்தார்களா, அல்லது மந்திரஉண்மைகளைக் கண்டு தெளிந்து தாமே அவைகளை மந்திரரூபமாக அக்ஷரங்களை அமைத்து வெளியிட்டார்களா?' என்று நமக்கு ஒரு சங்கை உண்டாகலாம். நமது சாஸ்திரப்படி அக்ஷர அமைப்புக்கூட முன்னமே இருந்ததென்றும் மந்திர அர்த்தத்தையும் மந்திர ரூபத்தையும் ரிஷிகள் கண்டறிந்தவர்கள் என்றும் தெரியவருகிறது. 'மந்திரங்களின் அக்ஷர அமைப்புகள்கூடத் தொன்றுதொட்டு இருப்பன. அவைகள் கடவுளது கிருபையால் புண்ணியவான்களாயும், மஹான்களாயும் உள்ள ரிஷிகள்மூலமாய் யாவரும் அறிய வெளியாகின்றன' என்ற கொள்கை சிலருக்கு யுக்திக்குப் பொருந்தாததாய்த் தோ

ன்றுகிறது. அவர்கள் மந்திர உண்மைகள் எக்காலத்தும் மாறாதிருப்பனவே அவைகளின் அக்ஷரங்கள் ரிஷிகளாலேயே அமைக்கப்பட்டுள்ளன என்று சொல்லுகிறார்கள். இதை ஆக்ஷேபித்து சாஸ்திரவாதிகள் மந்திரங்களது அக்ஷர அமைப்புக்களும் எக்காலத்திலும் மாறாதிருப்பனவென்று யுக்தி பூர்வமாய் ஸ்தாபிக்கிறார்கள். இதை இங்கு சொல்லப்புகுந்தால் விஷயம் மிக விரியுமாதலால் வேதமந்திர விஷயங்களின் ஸ்வரங்களைப்பற்றிச் சொல்லுங் கால் இதை ஒருவாறு விவரிப்போம். இந்தச் சங்கை வேதமந்திரங்களின் அர்த்த விஷயத்தில் ஒருவருக்கும் இல்லை. இவ்வர்த்தங்கள் வெளிவந்தவரையிலும் நமக்கு நன்மையையே விளக்குந் திறனுடையன, அவைகள் எக்காலத்திலும் மாறாதிருப்பனவே என்பதற்கு ஐயமில்லை. ஆனால் முற்கூறியபடி விவரிக்கும் முன் நாம் இவ்விஷயத்தில் இவ்வித நம்பிக்கையை உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை ஒருவாறு திருஷ்டாந்த மூலமாய் விளக்குவோம். நமது சிறுவர்களுக்குப் பிரபஞ்சத்தில் ஆகர்ஷண சக்திஒன்றிருக்கிறது என்று அறிவதற்குவேண்டிய யுக்தி வாதங்கள், ஆதாரங்கள், அந்தச் சக்தியிலிருந்து நாம் அனுமானிக்கக்கூடிய அரியவிஷயங்கள் ஆகிய இவைகளை ஆதியில் கற்பிக்காமற்போனபோதிலும், அவர்களுக்கு இவ்விஷயங்களில் ஆதியில் உண்டாகும் நம்பிக்கைக்கு யாதொரு குறைவுமில்லை. இது போலவே நமது வேதங்களின் விஷயத்திலும் இம்மாதிரியான நம்பிக்கையை நாம் வைத்துக் கொள்ளலாம். இதனால்தான் நமது மதநூல்கள் உறுதியாய் வேதமந்திரார்த்தங்களும், அவைகளின் அக்ஷர அமைப்புக்களும் அனாதியாய் எக்காலத்திலும் மாறாது இருக்கும் திறமை வாய்ந்தன என்று முதலில்வற்புறுத்துகின்றன.

நமது வேதங்களில் அடங்கிய உண்மைகள் மாத்திரமே அனாதி என்பதாக ஹிந்துக்கள் ஸ்தாபிக்கவந்தவர்களல்லர். வேறுமதங்களில் காணப்படும் யுக்திக்குப் பொருந்தும்படியான சிறந்த உண்மைகளெல்லாம் அனாதி என்பதே அவர்களது அபிப்பிராயம். இப்படியல்லாது தமதுவேதங்கள் மாத்திரந்தான் அனாதி என்று கொண்டால் தமது மனஞ்சிறுத்து மேலான உண்மைகள் அதில் தோன்றி விருத்தியடைவதற்கே இடமில்லாமல் போகுமென்று அவர்கள் நன்றாய் அறிவார்கள். கிறிஸ்தவரது பைபிளாயினும், துலுக்கரது குரானாயினும், பௌத்தரது பிடகமாயினும், பாரஸீ ஜாதியாரது ஜெண்டவஸ்தாவாயினும் இன்னும் வேறுஎவர் மதநூலாயினும் சரி அதிலடங்கி இருக்கும் உண்மைகளை ஹிந்துக்கள் ஒருக்காலும் அவமதித்துக்கண்மூடித்தனமாய் அங்கிகரிக்காமலிருப்பதில்லை. மதத்துவேஷம்என்றபேய் இவ்வாரியரை ஒருநாளும் வந்தணுகாது. உண்மை, யாரிடத்திருந்தாலும் ஸரி, அது எந்த அக்ஷர அமைப்புக்களால்வெளிவந்தாலும்ஸரி அதற்கு ஒரு குறையும் ஏற்படாது என்பதை இவர்கள் நன்றாய் உணர்ந்தவர்கள். இதற்கேற்பவே ஞானவாஸிஷ்டத்தில் வஸிஷ்டர் இராமருக்கு உபதேசிக்குங்கால் உண்மையானது சிறுகுழந்தைகள் முதலிய அறியாமை நிறைந்தவரிடம் இருந்துவந்தபோதிலும் அதைச் சிக்கெனப் பிடிக்கவேண்டும், உண்மை யல்லாதனவாயும், யுக்திக்குப் பொருந்தாதனவாயு முள்ளவைகள் பிர்ம்மாவினிடமிருந்து வந்தாலும் அதைத் தைரியமாய் நிராகரிக்கவேண்டும்" என்று கூறியிருக்கிறார். அனாதியாய் கிடக்கும் உண்மை ஞானமானது வரம்புள் அடங்கி இருக்கும் வாக்கியங்களில் மாத்திரம் அடங்கிவிடும் என்பது யுக்திக்குப் பொருந்தாது, என்ற உண்மையைத் தெளிவாய் அறிந்ததால்தான் நமது முன்னோர் மதவிஷயத்தில் இவ்வளவு மேன்மையான கொள்கைகளை உடையவராயிருந்தனர்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், B.A., L.T.

## பீ. ஆர். ராஜம் அய்யர் அவர்கள்.

### B. R. RAJAM IYER Avl., B. A.

---

### V. தேகம் நழுவிய சருக்கம்

### His Passing Away

*நீரிற்குமிழி யிளமை நிறைசெல்வம்*
*நீரிற்சுருட்டு நெடுந்திரைக—ணீரி*
*லெழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே*
*வழுத்தாத தெம்பிரான் மன்று.*

இவ்வாறு வெளிவிஷயங்கள் யாவும் ராஜம் அய்யருக்கு விரோதமாக அணிவகுத்து நிற்குங்காலத்தில் உள்ளூரவே இவரை ஓர் வியாதி கவர்ந்துகொண்டு விருத்தியாகிவந்தது. இரண்டாம்தரம் குடற்சிக்கல் நோய் வந்த பின்பு விருத்தியாகிய வ்யவஹாராதி சச்சரவுகளே இந்த வியாதியை உண்டாக்கி பலப்படுத்தி வந்திருக்கலாம். இவர் தேகத்தில் ஓர்வித வாட்டமும் காணப்படவில்லை. ஆனால் இவர் கொஞ்சதூரம் நடந்தால் கால் ஓய்ந்துபோகிறது பலஹீனமாக இருக்கிறது என்று மாத்திரம் அடிக்கடிப் பிரபுக்களிடம் சொல்லிவந்தார். பிரபுக்கள் ராஜம் அய்யர் தேகத்தில்ஓர்வித வாட்டமும் இல்லாதிருப்பதைக்கண்டு இது நரம்பு ஸம்பந்தமான பலஹீனமென்று எண்ணி ராஜம் அய்யருக்கு நரம்பை சீர்திருத்தவேண்டிய ஔஷதங்களைக் கொடுத்து வந்தனர். இதனால் ராஜம் அய்யருக்கு ஓர்வித குணமும் காணாமலிருந்ததோடுங்கூட வரவர இடுப்பில் பலமில்லாமல் போய்க்கொண்டேவந்தது. பிரபுக்கள் எத்தனையோதரம் ராஜம்அய்யர் நீரை எடுத்துப் பரிசோதிக்கவேண்டும் என்று எண்ணி அவரை நீரெடுத்து அனுப்புவிக்கும்படிக் கேட்டபோதிலும் அவர் அசிரத்தை யாகவே இருந்துவிட்டார். இவருக்குச் சிறு வயதிலிருந்து இரவில் நல்ல தூக்கம் பிடிக்காமலே இருந்து கொண்டிருந்ததாம். அந்தத் தூக்கம் இன்மை இந்தக்காலத்தில் அதிகரிக்க 1898-ம் வருஷம் எப்பிரல் மாதத்தில் இவருக்கு மூன்றுநாள் இரவில் தூக்கமே இல்லாமல் போய்விட்டது இதனால் இவருக்கு பலஹீனம் அதிகமாக பிரபுக்களிடம் வந்து தமக்கு தூக்கத்திற்கு ஏதாவது மருந்து கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அவர்கள் இதை ஸாதாரண பலஹீனம் என்று எண்ணி மயக்கம் கொடுக்கும்படியான மார்பியா என்றவஸ்து கலந்த மருந்தைக்கொடுக்க அன்றிரவு ராஜம் அய்யர் நன்றாகத் தூங்கினார். காலையில் விழித்ததும் அவர்முகம் வீங்கியிருந்தது. இதைப் பிரபுக்கள் கேள்விப்பட்டதும் உடனே தாமஸிக்காமல் பரபரப்போடு ராஜம் அய்யர் நீரைத்தருவித்துப் பரிசோதித்தனர். அதில் ஏராளமாக வேண்கரு (ஆல்ப்யூமென்) இருப்பதைக்கண்டு மனமழிந்தனர். முன்னாள் கொடுத்த தூக்கமருந்து இந்தக் கொடும் வியாதியை ஸ்திரப்படுத்திவிட்டது. உடனே ராஜம் அய்யர் தகப்பனார் முதலியவர்களுக்கு தந்தி கொடுக்கும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டு பிரபுக்கள் இவருக்கு சிகித்ஸைகள் செய்யத் தொடங்கினர். இதற்குள் வியாதிமுற்றிப்போய் விட்டபடியால் மருந்தொன்றும் பிடிக்காமல் போக வரவர நீர் இறங்குவதுகுறைந்துகொண்டே வந்தது. இது குறையக் குறைய இதன் விஷம் தேகம் எங்கும் பரவிற்று. உடனே இரண்டொரு நாளைக்கெல்லாம் இவர் தேகம் மலைபோல வீங்கிவிட்டது. ஐந்து நாளைக்கெல்லாம் இவர் கண்களிலிருந்து பார்வை அகன்றது.

இந்த அகாத ஸமயத்திலும் ராஜம்அய்யர் காட்டிய பொருமையே பொருமை! பெரியோர்கள் மரணத்தை நிர்பயமாக ஏற்றனர் என்று நாம் கதையில் தான் கேட்டிருக்கிறோம். இவ்வாறு செய்பவர் இக்காலத்திலும் இருப்பார்கள் என்றுஎண்ணியிருக்கமாட்டோம். இந்த ஸமயத்தில் ராஜம் அய்யர் கூடவே இருந்தவருக்கு பெரியோர்களின் பெருமை நன்றாக விளங்கியிருக்கும். அவர்களுக்குங்கூட ராஜம் அய்யர் இருந்தமாதிரி

யைப்பார்த்த உடன் அப்பொழுதாவது மரணத்தை துச்சம் என்று எண்ணும் நிலை வந்திருக்கலாம். மருந்துண்ணுவதிலாகட்டும் மற்றும் வேறு எந்தவிஷயங்களில் ஆகட்டும் ராஜம் அய்யர் தமது பிடிவாதத்தைக் காட்டவேயில்லை. இவரது வியாதி வீக்கம் ஸம்பந்தமானதாகையால் அதிக வலிமுதலிய தொந்திரவை அவருக்குக் கொடுக்கவும் இல்லை, அவரது பிரஞ்ஞையையும் மங்கும்படி செய்யாதிருந்தது. இந்த இரண்டும் இல்லாமல்போக ராஜம் அய்யர் கண்கெட்டது ஒரு பெரிய ஸுகம் என்று எண்ணி இடைவிடாது நிஷ்டையையே ஸாதித்து வந்தார். அப்பொழுது அவர் இவ்வளவு பரிசுத்தமனதோடு அசைவற்று படுத்திருந்த படுக்கை அறையில் அவருக்கு வேண்டிய சிச்ரூஷையை பிரபுக்கள் செய்துகொண்டு தயாராக இருந்து உறவினர்களை அதிக சச்சரவுகள் செய்ய விடாதிருப்பதை நோக்கியவருக்கு அந்த உள் ஓர் சிறந்த கோயிலாகவே தோற்றியது. அங்கு வந்தவர்கள் எல்லோருக்கும் ஞானஸம்பந்தமான எண்ணங்களே உண்டாயின.

இவ்வாறு வெகுகம்பீரத்தோடு படுத்திருக்கையில் அவர் சாவதற்கு இரண்டு மூன்று நாளைக்குமுன் ‘கன்றினுக்குச் சேதாகனிந்திரங்கல்போல’ அன்பது பெருகி சாந்தானந்தஸ்வாமிகள் தமது சிஷ்யனை கடாக்ஷித்து தேற்றிச்செல்ல அங்கு வந்துசேர்ந்தார். ஸ்வாமிகள் வந்திருக்கிறார் என்று அருகிலிருந்தோர் ராஜம் அய்யருக்குச் சொல்ல, இதுகாரும் அடங்கி இருந்த அவரது குருபக்தி அவருடைய உள்ளத்தில் பொங்கி எழுந்தது. இதுவரையில் ராஜம் அய்யர் தமது குருவை ஒழுங்காகப் பூஜை செய்தவர் அல்லர். தமது அந்தியகாலத்தில் “இந்த மஹானது அனுக்கிரஹத்தால் அன்றோ நாம் இப்பொழுது ‘கசத்த தேகத்திலிருக்கினும் ஆனந்தக்கடல்’ வடிவாக இருப்பது!” என்றுதோன்றத்தோன்ற அவர் மனதில் அன்பெனும் ஆறு கரையது புரண்டோடியது. தமது தேகபலஹீனத்தைக்கூடக் கவனியாது தமது குருவுக்கு பாதபூஜை செய்தால் நலமாகயிருக்கும் என்று தமது உள் எண்ணத்தை அவர் வெளியிட்டார். இதை அறிந்த ஸ்வாமிகள் ராஜம் அய்யர் உறவினர்களுக்கு இதனால் மனஸ்தாபம் அதிகரிக்கும் எனக்கருதி அவர் அருகில் சென்று, “ராஜம் அய்யர்! உமக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. இதுவரையில் நீர் எனக்குப் பாதபூஜையையா செய்துகொண்டிருந்தீர்? ‘மனதிற்கு மனதே ஸாக்ஷி.’ நீர் வெளிப்படையாக உமது அன்பைக் காட்டாவிடினும் உமது அன்பின் பெருமை எனக்குத் தெரியாதா? ஆகையால் நீர் உமது தேகத்தை இந்தக் கஷ்ட ஸ்திதியில் வருத்தப்படுத்த வேண்டியதில்லை” என்று மெதுவாகச்சொல்லி அவரை ஸமாதானப்படுத்தினார். ஸ்வாமிகளின் குறிப்பை அறிந்த ராஜம் அய்யர் உடனே அடங்கிவிட்டார். அப்பொழுது,

‘ஐயனே எனதுள்ளேநின் றனந்தஜன் மங்களாண்ட
மெய்யனே யுபதேசிக்க வெளிவந்த குருவேபோற்றி
உய்யவே முத்திநல்கு முதவிக்கோர் உதவிநாயேன்
செய்யுமா றொன்றுங்காணேன்திருவடிபோற்றிபோற்றி

என்ற கைவல்யப் பாடலின் கருத்து ராஜம் அய்யர் மனதைக் கவர்ந்து ஆனந்தமழை பொழிந்திருக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

ஸ்வாமிகள் வந்து போனதன்பின்பு வரவர ராஜம் அய்யருக்கு நாடிகள் அடங்கிக்கொண்டே வந்தன. ஆனால் அவர் வியாதியில் வீக்கம் உண்டாயிருந்ததால், ‘வீக்கமோ தூக்கமோ’ என்ற பழமொழிக்கேற்ப உயிர்போகும் தருணம்வரையில் நோயாவது மயக்கமாவது அவருக்கு வரவேயில்லை. இவ்வாறு தேகபாதை முதலியன ஒன்றும் இன்றி மரணச்சோர்வு மாத்திரம் காணப்படும் மரணத்திற்கே அனாயாஸ மரணம் என்று பெயர். இவ்விதமாகிய

மரணம் இவருக்குவந்துகொண்டிருந்தபடியால் இவர் நிச்சிந்தையாக முடிவுவரையில் அசைவற்று நிஷ்டையிலிருந்தார். நடுவில் பிரபுக்கள் இவரைக் கலைத்து 'குடும்ப விஷயமாக ஏதாவது சொல்ல விருப்பம் இருக்கிறதோ?' என்று கேட்டதற்கு, 'ஒன்றுமில்லை' என்று அவர் பதில் கூறிவிட்டு மௌனமானார். ராஜம் அய்யர் வாக்கின்படியே, 'குருவருளால் எவன் ஒருவன் தனது முடிவு காலத்தில் வேறொன்றையும் சிந்திக்காமல் தனிமையாக காயத்திரிசென்றடையும் ஜகந்நாதரை தியானம்செய்துகொண்டு தனது தேகத்தை நழுவவிடுகிறானோ அவனே நன்றாக இறந்தவன்.' இம்மாதிரி அற்புதமான மரணம் ராஜம் அய்யருக்கு 1898-வருஷம் மேமீ 13ம் தேதி அதிபால்யமாகிய 26-வது வயதில் கிடைத்தது. அவர் அருகிலிருந்த பிரபுக்களும் நெருங்கிய தோழர்களும், முதலில் சற்றே துக்கித்தபோதிலும் 'அரிது, அரிது ராஜம் அய்யர்போல் வாழ்தலும் இறத்தலும்' என்றே அவரைப் புகழ்ந்திருக்கவேண்டும்.

ராஜம் அய்யர் பரமபதம் அடைந்தவிஷயத்தில் அநேகர் அநேகஅபிப்பிராயங்களைக்கொண்டிருந்தனர். அவர் தகப்பனார், 'பிஞ்சில்பழுத்து வெம்பி வெடித்ததாலும் தக்க குருவை அடையாததாலும் என் பிள்ளைக்கு அகாலமரணம் வந்தது' என்று பரிதவித்தார். அவரது சிறப்பை அறியாத உறவினர்கள் எல்லோரும் இவ்வாறே எண்ணி இருந்தனர். சாஸ்திர விஷயத்தில் தேர்ச்சி அடைந்த சிலர், ஒழுங்குப்படி யோகாப்பியாஸாதிகளை ராஜம் அய்யர் செய்யாத குற்றத்தால் அவரை இளம் வயதில் இழுக்கும்படிநேரிட்டது என்று துக்கித்தனர். அருகிலிருந்த அவரோடுபழகிய உள்ளஅன்பருக்குத் தான் ராஜம் அய்யர் ஸாதாரணமாக ஆயுஸ் மாத்திரம்முடிய மற்றையவரைப்போல இறந்தார் என்பது தெரியும். அவர்கள், முற்கூறியவர்கள் கொண்டிருக்கும் எண்ணத்தை மாற்றபிரபுத்த பாரதம் இரண்டாம் தொகுதி 12-ம் ஸஞ்சிகையில் தாம் எழுதி வெளியிட்டுள்ள ராஜம் அய்யர் சரித்திர முடிவில் தாம் அறிந்த விஷயங்களைப் பிரசுரம் செய்திருக்கின்றனர். ராஜம் அய்யர் பரமபதம் அடைந்ததைப்பற்றி அவரை அந்தரங்கமாக அறிந்த சிலர் 'அவர் புண்ணியாத்மா. உள்ளபடி முமுக்ஷுத்வம் உண்டாகி அனுபவம் பெற்றவர். ஆனால் லௌகிக விஷயங்கள் அவருக்கு விரோதமாக ஏற்பட்டன. அவைகளைத் துறந்துபோய் நிஷ்டை ஸாதிக்க வியாதியில் அடிபட்டு பலஹீனமான அவர்தேகம்இடங்கொடாது. இவைகளை நோக்கிக் கடவுளே தமது அருளால் அவரைச்சுற்றிலும் இருந்த கஷ்டங்களிலிருந்தும், ஸ்வாமிகள் ஸமாதியான பின்பு அவருக்கு ஏற்படக்கூடும் கஷ்டங்களிலிருந்தும் அவரை விடுவித்துத் தமது பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொண்டனர். நல்லோர் உலகில் சீக்கிரம் இறப்பதற்கு இதுவேதான்எங்கும் காரணமாக இருக்கும். அவரது அபிவிருத்திக்கு அவர் இருக்கும் இடம் தகாததாக இருப்பின் கடவுள் அவர்களை உடனே தம்மிடம் அழைத்துக்கொள்ளுவார்' என்று அபிப்பிராயப் படுகின்றனர். அவர்களே அபிமானம் மிகுந்த வேறோர் ஸமயத்தில், 'ராஜம் அய்யர் மாத்திரம் இப்பொழுது உயிரோடிருந்தால் நாகரீகம் மிகுந்து முமுக்ஷுத்வம் உண்டாவதே மிகக்கடினமாக இருக்கும். இக்காலத்தில் உண்மையாகப் பாடுபடும் சிலருக்கு அவர் மிகுந்த ஸஹாயமாக இருப்பார். இக்காலத்திலோ பக்தி முக்கியமென்று ஒரு திறத்தார் ஸபைகள் மத்தியில் பகவந்நாம ஓசையில் பரவசமாகிக் குதிப்பதே முமுக்ஷுத்வம் வருவதற்குத் தக்க ஸாதனம், என்று கொண்டு அவ்வாறே செய்துவர அது வீண் மனக்கொதிப்பாக மாத்திரம் முடிந்து மேல் விருத்தியாவதற்கு தடையாக வருகின்றது. ஞானம் முக்கியம் என்று கொண்டு மற்றொரு திறத்தார் வாசா கைங்கரியம் அன்றி வேறொன்றும் செய்யாது தானம்

தர்மம், தயை, ஆராதனை, நல்லொழுக்கம் முதலியவைகளைக் கவனியாதவர்களாக வீண்காலம் கழிக்கின்றனர். இக்கொடிய காலத்தில் ஞானத்தால் வெளி வருபவைகளை சிரத்தையாக பக்தியின் ஸஹாயத்தால் இவ்வாறு நிஷ்டையில் அனுபவத்திற்குக் கொண்டுவருவதென்று ராஜம் அய்யர் நன்றாக வெளிப்படுத்தி இருப்பார்' என்று எண்ணி உருகுவார்கள்.

மஹானாகிய ராஜம் அய்யர் சரிதை முடிந்தது, இவர் முமுக்ஷுத்துவத்திற்காகப் பட்ட பாட்டையும், பின்பு நிஷ்டையில் நிலைப்பதற்காகப் பட்டபாட்டையும் நன்கு உணர்ந்து உருகி நாமும் மேன்மை அடைய விடாது முயலுவோமாக.

இனி இச்சரிதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவைகளைச் சுருக்கிக் கூறுவோம். எந்தப் பாஷையிலாகிலும்சுத்த கல்பனா சக்தியால் வெளிவந்திருக்கும் அருட்பாடல்களை உள்ளபடி உணரும் சக்தி ஒருவனுக்கு வருமாயின் அவன் எளிதில் முமுக்ஷுத்வத்தை அடைந்து முக்திபெருவான் என்று நாம் இவர் சரித்திரத்திலிருந்து முதலாவதாகத் தெரிந்துகொள்ளவேண்டியது. உலகத்தில் எல்லோரும் பந்தப்பட்டிருப்பதால் ஸுகம் அடையவே முயல்கின்றனர். அவர்கள் முயலும் வழிகளிலும், அவர்கள் அடையும்ஸுகங்களிலுமே அதிக வித்தியாஸங்கள் காணப்படுகின்றன. முமுக்ஷுவும் ஸுகத்திற்கே பாடுபடுகின்றான். மற்றையவர்களைப்போல நிலையற்றதாயும் பிறருக்கு துக்கஹேதுவாயும், உள்ள ஸுகத்தை பெரிதென்று எண்ணுததால், பிறருக்கு யாதொரு கஷ்டத்தையும் உண்டாக்காமல் எப்பொழுதும் மாறுதிருக்கும்படியான நிரதிசய ஸுகத்தை அடைவதே அவனது உள்ளக் கருத்தாகக் காணப்படுகின்றது. இந்தச் சிறந்த நோக்கத்தின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து இதை ஸாதிக்க இளமை வயதாகிய 26-ல் இதற்கு விரோதமாகிய ஸந்தர்ப்பங்களுக்கிடையில் மனப்பூர்வமாகப்பாடுபட்டு முடிவில் இதை ஸாதித்ததே இவர் சரித்திரத்தில் முக்கியமான விஷயம். இதனால் வைதிக ஸம்பிரதாயப்படி ஆசாரங்களை விடாது செய்தவர்தான் ஒருவனுக்கு முமுக்ஷுத்வம் வரும் என்ற விதிக்கு பகவானே, உள்ளத்துறவும் கனிவும் வாய்ந்த தமது நிஜபக்தன் விஷயத்தில் அடிக்கடி மாறுக நடக்கிறார் ஆதலால் உள்ளத்துறவும் கனிவுமே முமுக்ஷுத்வத்திற்கு ஸாதனங்கள் என்பதை நாம் இவர் சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது. வைதிக ஆசாரத்தோடு முற்கூறிய லக்ஷணங்கள் கலந்திருப்பின் அது 'பொன் மலர் நாற்ற முடைத்து' என்பதுபோல மிகச் சிறந்தது என்பதற்கு என்ன ஸந்தேகம்?

---

ஓர் அதிசயசம்பவம்:-ராஜம் அய்யர் இறந்த இரண்டொரு நாளைக்கெல்லாம், இரண்டொரு போலீஸ்காரர்கள் அவர் வீட்டிற்குவந்து ராஜம் அய்யரைப் பார்க்க வேண்டுமென்று பிரியப்பட்டனர். விஷயத்தை விசாரித்ததில் ராஜம் அய்யர் 1898-ம் வருஷம் ஏப்ரல் மாஸ ஸஞ்சிகையில் எழுதி வெளியிட்ட வேதாந்தமும் சக்கிரவர்த்தி பெருமானும் என்ற வியாஸத்தில் ஏதோ ராஜநிந்தனையாகச் சில விஷயங்கள் எழுதியிருப்பதற்காக அவரைக்கண்டு அவ்விஷயமாகப் பேசவேண்டும் என்று அந்த ஸேவகர்கள் தெரிவித்தனர். உடனே அங்கிருந்தோர், ராஜம் அய்யர் சிவலோகம் சென்றதை அவர்களுக்குத் தெரிவிக்க அவர்கள் தமது இருப்பிடம் சென்றனர். முன் குறிப்பிட்ட வியாஸத்தின் முன்பாகத்தில் வேதாந்தம் சக்கிரவர்த்தி பெருமானது அரசாட்சியை எப்பொழுதும் கவிழ்க்கவே பார்க்கிறது; அது இருக்கிறவரையில் என்றைக்காவது அவருக்கு அபாயம் வருவது திண்ணம், ஆகையால் அவர் எந்த ராஜ்யத்திலும் வேதாந்தத்தைத் தரிக்கவிடக்கூடாது என்று வெகுவாக எழுதியிருந்தாரே ஒழிய சக்கிரவர்த்தி பெருமான் இன்னர் என்பதை அவர் குறிக்கவில்லை. வியாஸமத்தியில் சக்கிரவர்த்தி பெருமான் அகங்காரம் என்றுசொல்லி அதன் அரசாட்சியை வேதாந்தம் இவ்வாறு கெடுத்துவிடுகின்றது என்று விவரமாக எடுத்துரைத்து, முடிவில் 'ராஜநிந்தனையில் இதைவிட மேல் பட்டதும் உண்டோ?' என்று மிகுந்த கம்பீரமாகத் தமது வியாஸத்தை பூர்த்தி செய்திருக்கிறார். இதன் ரகஸியத்தை உணராமலா ராஜாங்கத்தார் ராஜம் அய்யரைச் சோதிக்க சேவகர்களை அனுப்பினர் என்ற சங்கை நமக்கு உண்டாகலாம். காலநிலைமையால் ராஜாங்கத்தார் அவ்வாறு செய்யும்படி நேர்ந்ததே ஒழிய வேறல்ல,

# காலம்

TIME

காலத்தால்தான் ஒவ்வொருவனுடைய ஆயுளும் கட்டப்பட்டிருக்கின்றது. நமக்கு ஒரு வருஷத்துக்கு எவ்வளவு நாட்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதே 365 நாட்கள்தான் மற்றொருவனுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அந்த 365 நாட்களடங்கிய ஒரு வருஷத்தை ஒருவன் நன்றாகச் செலவிட்டு நலம் பெறுவதேன்? மற்றொருவன் வீணாக்கி துக்கப்படுவதேன்? நலம்பெற்றவனை உலகத்தார் 'அதிர்ஷ்டசாலி' என்பதேன்? துக்கப்படுகிறவனை 'அதிர்ஷ்டமற்றவன்' என்பதேன்? இவ்வண்ணம் துக்கப்படுகிறவர்கள்தான் உலகத்தில் அதிகம். இவர்கள் விளைவித்துக்கொள்ளுங் கேடு தாங்களே விளைவித்துக்கொள்ளுங்கேடேயன்றி ஒருவருஷத்தில் நாட்கள் குறைந்துவிட்டதால் வரும் கேடல்லவென்பது திண்ணம்.

உன் காலத்தைச் சரிவரச் செலவிட நீயே சட்டதிட்டங்கள் அழகாக ஏற்படுத்தி அதன் பிரகாரம் நடந்து தீரவேண்டும். அதில் எள்ளளவேனும் சோம்பல் என்பது கூடாது. கஷ்டப்பட்டாற்றான் அக்கஷ்டத்தின் பயனாகிய சுகத்தை ஒருவன் அனுபவிக்கலாம். கஷ்டப்படாமல் சுகம் ஒருபொழுதும் கிட்டாது. கஷ்டப்படாமல், அதிர்ஷ்டமில்லை என்று அழும் அழுமூஞ்சிகள் இவர்களே. ஒரு நாளைக்கு மணிகள் இருபத்து நான்கு என்று குறிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? அம்மணிகளை வேலைக்கிவ்வளவு, தூக்கத்துக்கு இவ்வளவு, படிப்புக்கிவ்வளவு, தியானத்திற்கு இவ்வளவு என்று நீ உனக்குள் உன் புத்திக்குத் தக்கபடிப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். வீண் டம்பமாகப் பங்கிட்டு ஒரு காகிதத்தில் கறுப்புக் கோடும் சிவப்புக் கோடும் போட்டு அழகாக எழுதி ஒட்டிவைத்துக் கொள்ளுவதில் பிரயோஜனமில்லை. அந்தப்படி நடந்தே தீரவேண்டும். புருஷ சக்தி, உற்சாக சக்தி, உறுதி, ஊக்கம் இவைகளுடன் அவ்வாறு நடந்து தீராவிட்டால் நீர்மேல் எழுத்துப்போல உனது ஏற்பாடுகள் ஒன்றுக்கு முதவாமற் போய்விடும்.

வேலை செய்கையில் உள்ளமும் கருத்தும் ஒன்றாய் ஆழ்ந்திக் கிடக்கவேண்டும். வேலையைத்தவிர வேறொன்றையும் நாம் கவனிக்கவே கூடாது. முற்றிலும் அழகாகச்செய்து முடிக்கவேண்டும் என்பதே நமது மேலான நோக்கமாயிருக்கவேண்டும். அவ்வேலையில் நாம் இறங்கியிருக்குங் காலத்தில் ஒருவரும் நம்மை வந்து நமது வேலையிலிருந்து நம்மைக்கெடுக்க நாமிடங்கொடுக்கலாகாது. நாம் எந்த வேலையில் இறங்கியிருக்கின்றோமோ அதேவேலையில் பலரிறங்கி யிருப்பார்கள். நம்மைவிட அவ்வேலையை அழகாகச் செய்தவனில்லை என்று பெயரெடுக்கும்வண்ணம் நாம் அவ்வேலையைச் செய்யவேண்டும். இது வெகு கஷ்டந்தான். பல பெயர்கள் முயன்றுவரும் ஒரு வேலையில் நாம் எல்லாருக்கும் மேலானவன் என்று பெயர் பெறுவது எளிதான காரியமன்று. மிகவும் சிரமசாத்தியம். ஆம் அவ்வாறு பெயர் பெற சிரமப்பட்டாற்றான் நாம் முன்னுக்கு வருவோம்; அவ்வாறு படும் சிரமம் மட்டும் ஒருபொழுதும் வீண்போகாது. இவ்விதமாய் சிரமப்படும்பொழுதுதான் இவ்வேலையிலுள்ள ஒவ்வொரு நுட்பங்களும் இரகசியங்களும் நமக்குநன்றாக விளங்கும். இவைகளை நாம் அறிந்துகொண்ட பொழுதுதான் அவ்வேலையில் மேன்மேலும் விருத்தியடைவோம். நீ ஒரு புத்தக வியாபாரியா யிருக்கலாம், அவ்வியாபாரத்தின் நுட்பத்தை ஆதியோடந்தமாய் ஆராய்ந்தறிந்து உனக்குமேல் தெரிந்தவனில்லை என்று பெயர் பெறுவது எவ்வளவு மேன்மை? அதுபோலவே ஒரு ஆபீஸில் நீ ஒரு குமாஸ்தாவாக விருக்கலாம். உன் யஜமானன் உன்னைவிட அவ்வேலையை அவ்வளவு அழகாகச் செய்தவன் வேறு ஒருவனுமில்லை என்று உன்னைக் கண்டு ஸந்தோஷிக்கும்படி நீ வேலைசெய்ய முயலவேண்

டும். இது ஸாத்தியமா என்ற பயம் மட்டும் ஒருபொழுதும் கொள்ளாதே. உன்னிடம் விடாமுயற்சி, புருஷசக்தி, உற்சாகசக்தி இவைகளிருக்கிறவரை ஒன்றும் அசாத்தியமேயில்லை. காலத்தைச் சரிவரச் சட்டதிட்டப்படி செலவிட்டவர்கள் எல்லா சங்கடங்களையும் வென்று முன்னுக்குவந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நிமிஷத்தின் பிரயோஜனத்தை நீ நன்குணர்ந்து விட்டால் நீ ஒரு நாளின் மகிமையை ஆராய்ந்தறிவாய். ஒவ்வொருநாளும் நம் ஆயுள் என்ற மரத்தின் ஓர் உறுப்பு நாட்களாலன்றோ நம்ஆயுள் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஒருநாளை நாம் வீணுக இழந்தால் அந்நாள் மறுபடி நம் ஆயுளில் திரும்பிவராதபடி இழந்தேவிட்டோம். அந்நாளை நாம் அநியாயமாய்ச் செலவிட்டால் நாம் பாவிகளாவோம்.

தேகப்பயிற்சி நாம் நம் தேக ஆரோக்கியத்துக்காகச் செய்யவேண்டியது அவசியமே. அதனிலும் மிதம்வேண்டும். மிதந்தப்பினல் புத்திக்குச் செலவிடவேண்டிய காலம் தேகப்பயிற்சியில் இறங்கிப் புத்தி மயங்கும். இந்துக்கள்,மகமதியர், வெள்ளைக்காரர்கள் இம்மூன்று இனத்தாரையும்பற்றி வியாயாமம் விஷயமாக ஒரு சிறுகதை உண்டு. இந்துக்கள் முக்கியமாய்ப் பிராமணர்கள், அதிகப் படிப்புப் படித்து தேகப்பயிற்சியை அலட்சியம்பண்ணி சக்தி ஈனர்களாகின்றார்கள்; இதற்கு எதிரிடையாக மகம்மதியர்கள் படிப்பில் குறைவாயிருந்து தேகப்பயிற்சியில் அதிககாலம் செலவிட்டு பலவான்களாகின்றார்கள்; வெள்ளைக்காரர்களோ, படிப்பில் எப்படியோ அப்படியே தேகப்பயிற்சியிலும் சரியாகக் காலத்தை அளவிட்டு எதிலும் குன்றாம லிருக்கின்றார்கள்.

தேக ஆரோக்கியத்திற்கு வியாயாமம் அவசியமாயினும் அதிககாலம் அதிலேயே கழித்தோமானல் புத்தி குன்றும்.

புத்தியன்றோ மானிடர்களுக்கு மேலான பூஷணம், அப்புத்தியாலன்றோ நாம் அறிவு பெறுகிறோம். ஆகவே நமது படிப்புக்களைச் சட்டதிட்டப்படி ஏற்படுத்திக்கொண்டு நாம் ஊக்கத்துடனும் உறுதியுடனும் படிக்கவேண்டியது அவசியமன்றோ. எந்த விஷயமான ஞானம் நம் செய்தொழிலுக்குப் பிரதானமோ அதில் நாம் ஒவ்வொருநாளும் இரண்டு மணிக்குக் குறைவில்லாவில் அத்தொழிலைச் சேர்ந்த சாஸ்திரங்களைப் படித்து நாளுக்கு நாள் சொற்பம் சொற்பமாக நம் அறிவை அதிகரித்துக்கொண்டு வருவோமேயானல் அதில் பெரும் கீர்த்தி பெறுவோம் என்பதற்கு ஐயமில்லை. பணத்தாசை கொண்டவன் நாளுக்குநாள் சிறுகச்சிறுக பொருள் சேர்த்து பெரும் பொருளீட்டிக் களித்து கூத்தாடுவதுபோல் நாமும் நாம் எடுத்தகாரியத்தில் மேலான பதவிபெற்று ஆனந்திப்போம். பெரும் தோரணையும் பெரும் புத்தியும் விசாலமான அபிப்பிராயங்களும் அடைந்து எல்லாரிடமும் புகழ் பெறுவோம்.

காலத்தின் மகிமையறியாதவன் தனக்குத் தோன்றியபடி எல்லாம் காரியம் செய்யப் புகுவதன்றி ஜாக்கிரதை என்பதே யில்லாமல் கண்டபடி யதைச் செய்து குட்டிச்சுவராக்குவான். ஏன் சரிவர செய்யவில்லை என்று கேட்டால் கோபித்துக்கொண்டு யஜமானனைப்,பொல்லாதவன் என்று வீண்தூஷணை செய்வான். இந்த வேலை கஷ்டமென்று வேறுவேலைக்கு மாறுவான். இவனுக்கு எந்தவேலையும் கஷ்டமாகையால் அங்கும் அவஸ்தைப்படுவான். பல வேலைகள் ஒன்றுமாற்றி ஒன்று தொட்டுக்கொண்டு ஓடிக்கொண்டே யிருப்பான். இன்ன தொழில் இவ்வண்ணம்செய்யவேண்டும் என்று பகுத்தறிவேயில்லாமல் எங்குபோனாலும் பங்கப்பட்டு அவஸ்தைப்படுவான். இவ்வாறு காலத்தைச் சரிவர செலவிட வகைதெரியாமல் போகிறவன்தான் "என் துரதிஷ்டம்" என்று அழப்பட்ட அழுமூஞ்சி.

—*By a Pundit.*

# தனிமையின் இனிமை

## SWEETNESS OF SOLITUDE

அஸாதாரணசக்தியை பிறவியிலேயே அமையப்பெற்றவர்களும், கல்விப் பயிற்சியால் அறிவை விசாலப்படுத்தியவர்களும் தமது மனம் தனிமையென்னும் நிலைமையை நாடிப் பற்றும்படிசெய்து கொள்ளுகிறார்கள். ஸுகானுபவக் கருவிகள் என்று ஸகஜமாய் கருதப்படும் பொருள்களை ஸம்பாதித்தவரும் ஆனந்தம் அடையவேண்டி தனிமையின் நிழலைத் தேடிச் செல்கின்றனர். இவர்கள் செல்வமும் அதிகாரமும் சேரப்பெற்றிருப்பதால் தமது சமாதானத்தைக் கலக்குவதும், தமது இன்பநுகர்ச்சியை இடையறுப்பதுமான விஷயங்களை நீக்குகின்ற நண்பர்களால் சூழப்பட்டிருப்பினும், தாம் அனுபவிக்கும் இன்பம் தெவிட்டி சோர்வடைந்து, இடையிடையே தனிமையென்னும் இளைப்பாறினாலன்றி இவ்வாழ்க்கையென்னும் வழியில் ஓடத் திடமற்றவர்களாயிருக்கின்றனர்.

இவ்வகையான மனப்போக்கை உண்டாக்க, தீக்ஷ்ணிய உணர்ச்சியும் விரைந்தியலும் மனோபாவனா சக்தியுமன்றி மற்றெதுவும் வேண்டியதாகக் காணவில்லை. ஏனெனின், ஒரு மனிதன், நற்குணப்பயிற்சியாவது அல்லது விஷய பரிசோதனையாவது செய்யாவிடினும், அவனுக்கு தற்காலத்தையும் முன்காலத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும் மனோ சக்திமாத்திரம் இருக்குமானால், ஒரேவித இன்பங்களும் துன்பங்களும் மீண்டு மீண்டு வருவதையும், ஒரே வகையான நம்பிக்கைகள் உதிப்பதையும், அவை நிறைவேறாமற்போவதையும் பார்த்து, ஒரு நாழிகையாவது இவைகளினின்றும் நீங்கியிருக்க விரும்பி, இந்திரியக் கருவிகள் தனக்கு அளிக்க இயலாத உண்மையைத் தன் மனதைக்கொண்டு ஆராயாமலுமிரான்.

இவ்வாறு தூண்டும் ஆசை, பெரும்பெயர், பெருஞ்செல்வம் படைத்தவனையும் விட்டதல்ல. அவன் தன் புத்தியை உபயோகிக்கப் பிறந்திருப்பானேயாகில், ஆயிரம் விசாரணைகள், சித்தாந்தங்கள், கொள்கைகள் இவைகளில் பிரவேசிக்காமலிருக்க இயலாது; பிரவேசித்தாலோ, தன் புத்தியைப் பிரயோகப்படுத்துவது அவசியமாகிறது. அவன் அடைந்துள்ள பெரும்பதவி இதற்குப் பிரதிகூலமாயிருக்கிறது; ஏனெனில், மற்றவர் ஆஞ்ஞைக்குக் கீழ்ப்படியாமலும், பிறர் ஒத்தாசையைக் கருதாமலும், உயர்ந்த அந்தஸ்தை அடைந்தவர் தம் வாழ்நாளின் பெரும்பாகத்தை வழக்குகளுக்கும் சடங்குகளுக்கும் பறிகொடுத்து தங்கள் பெயரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் அதன் எஜமானனைக்காட்டிலும் பெரிய ஸேவகனில்லையென்று ஒரு பழமொழியுமுண்டு.

பெயர்போன கணிதசாஸ்திரியொருவரை ஓரரசன் நோக்கி: 'நீர் கண்டுபிடித்த கலையைக்கற்க சுருக்குவழி 'ஒன்றுமில்லையா' என்று வினவ, அதற்கு அக்கலைஞர், அக்கலையைக்கற்க அரசமார்க்கம் ஒன்றும் காணேன்' என்றாராம். மற்ற பொருள்களையோ வல்லமையால் கைக்கொள்ளலாம்; திரவியத்தைக் கொடுத்து வாங்கலாம். ஆனால் பிரயாசைப்பட்டுக் கற்பதினாலேதான் அறிவு விசாலமடையும். அவ்வாறு கற்பதற்கோ தனிமை இன்றியமையாதது.

முகஸ்துதியால் மனமகிழச் செய்து புகழ்ச்சியால் உத்ஸாகப்படுத்தும் ஜனஸமூகத்தைவிட்டுப் பிரிந்து, தனிமையை அரசரும் வீரருங்கூட நாடிச்செல்லும்படி செய்யும்காரணங்களில்மேற்கூறியவை சிலவாம். ஆனால்உயர்ந்த அறிவினர் மாத்திரமே இவ்வெண்ணங்கள் உதிப்பதால் பயன் அடைகின்றனர் என்று காணப்படுகிறது. சாதாரண ஜனங்களுக்கு இத்தகைய கருத்து உதிப்பதே துர்லபம்; அவர் மனதுக்கு, தமது கண் முன்னர் காணப்படும் விஷயங்களின் ஸம்பந்தத்தைப்பற்றி விசாரிப்பதே போதுமானதாகத் தோற்றுகிறது. ஐம்புலன்களின் கவனத்தைக் கவரும் விநோதங்களையும் அவற்றால் விளையும் துன்பங்களையும் விட்டு வேறு விஷயங்கள்மேல் அவர் மனம் பெரும்பாலும் செல்வதில்லை.

அனைவரும் அடிக்கடி தனிமையை நாடவேண்டும் என்பதை வற்புறுத்த மற்றொரு காரணமுளது அதாவது, நமது மதக்கோட்பாட்டின் கட்டுப்பாடேயாம். அதை நாம் இவ்விடம் கூறுவது அவசியமே. ஏனெனில் இக்காரணம், நாம் இவ்வுலகத்தில் செய்யவேண்டிய கடமையையன்றி மறுமையில் தேவப்பிரீதியை அடையவேண்டிய நம்பிக்கையையும் பொருந்தியதாயிருக்கிறது. மேலோரும் கீழோரும், அறிவினரும் அறிவிலிகளும், எத்திறத்தாரும் இதை அனுஸரித்து நடக்கவேண்டியது. பிடிவாதமாய் தீமை யியற்றி கடவுளை அலக்ஷியஞ்செய்யத் தீர்மானித்தவர்களையும், கடவுள் தம் நடத்தையை எவ்வாறாயினும் அங்கீகரிப்பார் என்ற பூர்ண

விசுவாஸத்தால் வெளிக்கோட்பாடுகளுக்கு அடங்காமல், விருத்தியடைவதற்கு இன்றியமையாத சாமான வகைகளைக் கைப்பற்றாமலிருக்கும் மானிடரையொழிந்து மற்றெவர் தாம் இத்தகைய கடமைக்குப் பாத்தியப்பட்டவரல்ல என்று எண்ணக்கூடும்?

மதாசாரத்தைப்பூண்டுஅதற்கேற்றவாறுஇவ்வாழ்க்கையை நடத்திவரும் மனிதனுடைய முக்கிய கடமையென்ன? இம்மையை யிகழ்ந்து, மறுமையையே பிரதானமாகக் கருதி கடவுள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதின் அவசியத்தைக் செவ்வனே உணர்ந்து,நல்வழியில் செல்வதின் நற்பயனையும், தீமை யியற்றுவதாலுண்டாகும் தண்டனையின் கடுமையையும் சீர்தூக்கி, இவ்வாழ்க்கையில் நம்பிக்கையின் மூலமாயும் பயத்தின் காரணமாயும் உண்டாகும் சோதனைகளுக்குச் சிக்காமல், இன்பதுன்பங்களைச் சமமாய் பாவிக்கும் மனோதிடத்தை அடைந்து, ஒருகால் மயக்கும் ஆசையின் வஞ்சனைக்குட்படாமலும், மற்றொருகால் பேரிடர் நேரிடுவதாயினும் அதற்கு அஞ்சாமல் முன்னிட்டும் நடந்துவருவதலேயாகும்.

நம்மைச் சூழ்ந்துள்ள பல விஷயங்கள் நமது முக்கிய கருத்தைக் கெடுக்க முயலுகின்றன. நமது மனதை வலியப்பற்றும் ஒவ்வொரு எண்ணமும் நமக்கு அபாயம் விளைவிக்கக்கூடும். நமக்கு களிப்பையாவது வருத்தத்தையாவது உண்டாக்கக்கூடிய ஒவ்வொரு விஷயமும் ஆனந்தத்தை யடையும் வழிக்குத் தடைசெய்கிறது. ஒன்று, நம்மை அவ்வழியினின்றும் பிரியச்செய்கிறது; அல்லது, நாம் அவ்வழியைத்தேடும் முயற்சியைத் தணிக்கிறது.

ஐம்புலன்களும், அறுவகைக் குற்றங்களும், ஆசைகளும்,இவ்வுலக சம்பந்தமான அநேக விஷயங்களில் நியாயமானவையும் நாம் நம்பிக்கைவைத்து நடக்கக்கூடியவையுமான வழிகாட்டிகள். அவைகளுக்கு இணங்கி விநாடிதொறும் நாம் நடந்துவருவதால் அவற்றை வழக்கத்தால் நம்பி, அவைகளுக் கெதிர் செல்லாமல் அவை ஏவியதைச்செய்யும் அடிமைகளாகிறோம். அவை இயற்கையாய் இழுத்துச்செல்லும் வழியில்செல்ல நாம் இணங்குந்தோறும், அவற்றின் வலிமை அதிகரித்தும் நமது வலிமை குறைந்தும்வருகிறது. துர்வழியில் நாம் முதலில் வைத்துச்செல்லும் அடிகள் அஸமாதானமா யிருந்தாலும், நாளடைவில் அவை நமக்கு பழக்கமாய்விடுகின்றன. அறிவற்று ஐம்பொறிகளுடனே யியங்கும் மிருகங்களைப்போல மனிதனும் விரைவில் வாழத்தொடங்குகிறான்.

நமக்கு அவசியமான விஷயங்கள் எவ்வாறு நாமாக ஏற்றுக்கொள்ளும் விஷயங்களைவிட பிரதானமாக விருக்கின்றனவோ அவ்வாறே நம் இந்திரியங்கள் நம் மனச்சாக்ஷியைவிட அதிக வலிமையுடையனவாயிருக்கின்றன ; அதுமாத்திரமல்ல : அவற்றின் முதன்மைக்கும் இதுவே காரணம். குற்றம் என்பதை அறியுமுன் நாம் வலி என்பதை அறிந்தஞ்சினோம். * நல்வழியின் அழகைக்கண்டு மயங்கும் சக்தியை யடையுமுன், சுகவுணர்ச்சியால் இன்பமடைந்தோம். இவ்வாறு இளவயதிலேயே வேரூன்றி நாள்தோறும் வளர்ந்துவரும் சக்தியை ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையின் ஏதேனு மொருகாலத்தில், தன்னிஷ்டத்துடனோ அல்லது அஜாக்கிரதையினாலோ, பலப்படுத்தித் தன் இந்திரியங்களின் அரசாக்ஷிக்குக் கட்டுப்பட்டு அவற்றிற்குஇன்னும் அதிக வலிமையையுண்டாக்குகிறான். தன் புலன்களைப் போனவழியில் பிரியத்துடன் விட்டாவது, அல்லது அவை செல்லும் மார்க்கத்தை மடக்காமல் சும்மாவிருந்தாவது, அவற்றின் அரசாக்ஷியின் அகம்பாவத்தை அதிகரித்து, அவற்றின் தேவைகளைப் பெருக்காமலிருக்கும் மனிதனே இல்லை என்னலாம்.

நாம், மதாசாரத்தின்படி வாழ யத்தனிக்கும் பொழுது, இவ்வாறு இயற்கையாய் உயிரை உறுதியுடன் பற்றும் ஐம்புலன்களின் ஸஹவாஸத்தை வேரறுக்க வேண்டியதாகையால் நமது கருத்துக்கு எதிராய் நிற்கும் ஆசைகளைப் போர் செய்து வெல்லவேண்டியது அவசியமாகிறது.

மதாசாரத்தின்படி வாழவேண்டுமென்ற இச்சை எவ்வளவு வெறுப்புடன் சிலரால் பரிகஸிக்கப்படினும், அல்லது மற்றும் சிலரால் எவ்வளவு பிரியத்துடன் சிலாகித்து விவரிக்கப்படினும், அனைவருக்கும் அவ்விச்சை எப்பொழுது மில்லாமற்போனாலும் ஏதோ ஒருவேளையாவது உதிக்கும் என்பது நிச்சயம். ஆனால் எல்லாருக்கும் இவ்விருப்பம் ஒரே விதமாய் உண்டாவதில்லை. பலர் பல வகையாய் இவ்வாவலைக் கொள்ளுகிறார்கள். இவ்வித்தியாஸத்துக்கு, மனப்போக்கும், மனஉருக்கமும், தேகநிலைமையும், அந்தஸ்தும், தூண்டும் கருவிகளும் அக்கம்பக்க ஸஹவாஸங்களும், இன்னும் கணக்கற்ற அநேக காரணங்களு முள.